த.வெ.க. ஆட்சியில் பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் அதிகரிப்பு – பாதுகாப்பின்மை!

# நடிகர் விஜய் ஆட்சிதான் தமிழ்நாட்டின் இருண்ட காலம் என வரலாறு சொல்லும்!

## தயாளு அம்மாள் பயிற்சிப் பள்ளியில் பெண்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி பள்ளி முகாமில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பேச்சு!

**சென்னை, ஜூலை 31–**

**“தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பில்லாத சூழல் உள்ளது” எனவும் “8 வயது குழந்தை முதல் 80 வயது மூதாட்டி வரை பாலியல் பலாத்காரம்” செய்யப்பட்டு வருவதாகவும் இந்த வேதனையான சம்பவம் புதிய ஆட்சியில் தொடர்கிறது என்றும் “தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் ஆட்சி செய்து கொண்டிருக்கும் காலம் தமிழ்நாட்டின் இருண்ட காலம் என்று வரலாற்றில் எழுதப்படும் எனவும் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு குறிப்பிட்டார்.**





சென்னை துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் உள்ள அன்னை தயாளு அம்மாள் பயிற்சி பள்ளியில் அழகு கலை பயிற்சி பெற்ற 297 பெண்களுக்கு, துறையில் சிறந்து விளங்கும் அழகு கலை நிபுணர்களின் வழிகாட்டுதலுடன் முழுநேர சிறப்பு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நேற்று நடைபெற்றது.

சென்னை ஏழு கிணறு பகுதியில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்ற முகாமை சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் துறைமுகம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பி.கே. சேகர்பாபு குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

பெண்களின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் செயல்பட்டு வரும் அன்னை தயாளு அம்மாள் பயிற்சி பள்ளி, நூற்றுக் கணக்கான பெண்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி பெண்கள் பொருளாதார ரீதியாக தன்னிறைவு பெறும் வகையில் பல்வேறு தொழில்பயிற்சிகள் வழங்கப்பட்டு வரும் நிலையில் அழகு கலை நிபுணர்களின் வழிகாட்டுதலுடன் முழுநேர சிறப்பு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் சென்னை, ஏழுக்குணறு பகுதியில் உள்ள குலோப் திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

தொடர்ந்து நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி. கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பேசுகையில்

**மக்களோடு இரண்டறக் கலந்துள்ள இயக்கம் தி.மு.க.!**

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்போது இது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும் ஆனால் ஆட்சி அதிகாரம் இல்லை என்றாலும் மக்களோடு இரண்டறக் கலந்து உள்ள இயக்கம் திமுக என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு சான்று என கூறிய அவர்

திமுக தலைவர் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு தீட்டிய திட்டங்கள் ஏராளம் என்றார்.

மேலும் பேசிய அவர் பெண்களுக்காக திமுக தலைவர் தீட்டிய திட்டங்கள் இனி எந்த அரசு வந்தாலும் தீட்ட முடியாத அளவுக்கு பல்வேறு திட்டங்களை தீட்டி உள்ளதாகவும் 50 ஆண்டுகள் பெண்ணினத்திற்கு தேவையான திட்டத்தை 5 ஆண்டுகளில் தீட்டியவர் திமுக தலைவர் என பெருமிதம் தெரிவித்தார்.

நாள்தோறும் தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் உள்ளது, 8 வயது குழந்தை முதல் 80 வயது மூதாட்டி வரை பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு வருவதாகவும் தமிழ்நாடு எதை நோக்கி செல்கிறது என்றே தெரியவில்லை என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் ஆட்சி செய்து கொண்டிருக்கும் காலம் தமிழ்நாட்டின் இருண்ட காலம் என வரலாறு பேசும் எனவும்

**6168 பெண்களுக்கு சிறப்பு பயிற்சி!**

80 நாளில் பெண்களுக்காக ஏதாவது ஒரு திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் தீட்டினாரா? என கேள்வி எழுப்பினார்.

விடியல் பயணம் திட்டத்தின் பெயரை மாற்றுகிறார், முதல்வர் படைப்பகத்தின் பெயரில் உள்ள முதல்வர் பெயரை மாற்றுகிறார், பெயரை மாற்றிக் கொண்டே போகலாம், திமுக தலைவர் செயல்படுத்திய திட்டங்கள் தமிழ்நாடு இருக்கும் வரை இருக்கும், மக்கள் மனதில் உள்ள திமுக தலைவரின் உருவத்தை எதைக் கொண்டும் மாற்ற முடியாது என கூறினார்.

மாயத் தோற்றத்திற்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளதாகவும் ஏன் தமிழக வெற்றி கழகத்துக்கு வாக்களித்தோம் என்ற நிலை உருவாகியுள்ளது என பேசிய அவர் 6168 பெண்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இப்பயிற்சி முகாமில் பகுதி கழகச் செயலாளர்கள் எஸ்.ராஜசேகர், எஸ். முரளி 6 வது மண்டல குழு தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார், மாநகராட்சி சுகாதார நிலைக்குழுத் தலைவர் திருமதி.டாக்டர்.ஜி.சாந்த குமாரி, அழகு கலை நிபுணர் திருமதி.அனு, மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் திருமதி சுதா தீனதயாளன் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர், ராஜேஸ்வரி ஸ்ரீதர் பொதுக்குழு உறுப்பினர் கலைச்செல்வி,தாஹா. எல்.நவீன்.எம்.சி,எல். சத்யநாராயணன், திருமதி. டி.தேன்மொழி, திருமதி. ஜோதி, ராஜராஜேஸ்வரி, திருமதி.டி ஹைமாவதி, இலக்கியா ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

# கர்நாடகா காவிரி நீர் தர மறுக்கிறது! ‘டம்மி த.வெ.க. அரசு’ பயந்து நடுங்குகிறது!

## தி.மு.க. ஐ.டி.விங் கண்டனம்!



சென்னை,ஜூலை.31-

நிர்வாகம் என்றால் என்ன, மாநில உரிமை என்றால் என்ன என்ற எந்த அடிப்படை அறிவுமே இல்லாத, முதுகெலும்பில்லாத கோழைகளைத் தேர்ந்தெடுத்தால் இதுதான் நடக்கும்!

கர்நாடக முதல்வர் காவிரியில் தண்ணீர் திறக்கவே முடியாது என்று உச்ச நீதிமன்ற தீர்ப்பையும், காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவையும் துச்சமாக மதித்துத் தூக்கி எறிகிறார். ஆனால், அதைப்பற்றிப் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினால், நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த் சற்றும் வெட்கமில்லாமல் சிரித்துக்கொண்டே ஓடுகிறார்!

தண்ணீர் தர மறுத்துக் கர்நாடகா அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுகிறது. ஆனால் இந்த டம்மி தவெக அரசோ, மைக்கை பார்த்தாலே பயந்து நடுங்கி ஓடுகிறது!

இவ்வாறு தி.மு.க. ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில்

# தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட உணவில் பல்லி!

## மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தூய்மை பணியாளர்களை முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்

திருவள்ளூர், ஜூலை 31-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சியில் பணியாற்றும் 100-க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட காலை உணவில் பல்லி இருந்ததாகக் கூறப்படும் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உணவை உட்கொண்டதைத் தொடர்ந்து பலருக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்ட நிலையில், 50-க்கும் மேற்பட்டவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், 4 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாநகராட்சி மூலம் ஒப்பந்த நிறுவனத்தின் வழியாக வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் பாதுகாப்பை கண்காணிக்க வேண்டிய அதிகாரிகள் தங்களது பொறுப்பை சரிவர நிறைவேற்றினார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது. அன்றாடம் நகரை சுத்தமாக வைத்திருக்கும் தூய்மை பணியாளர்களுக்கே பாதுகாப்பான உணவை உறுதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பது அரசின் நிர்வாகத் தோல்வியை வெளிப்படுத்துவதாக பலரும் குற்றம் சாட்டுகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களை திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சாமு நாசர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் மருத்துவரிடம் அளிக்கப்பட சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.

இதில் மாநகர மேயர் ஜி.உதயகுமார், மாநகர பொறுப்பாளர் சன்பிரகாஷ், என்.ஜோதிலட்சுமி ஜி.நாராயண பிரசாத், யுவராஜ், குமார், வீரபாண்டியன் வழக்கறிஞர் புரட்சிதாசன், மு.பெ.சசிகுமார், மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

